A/L சனி,ஞாயிறு
வகுப்புகள்
Chemistry: - Mr. மகாதேவா
வெப்ப இரசாயனம்
Physics - Mr. நந்தகுமார்
வெப்பவியல்
ஆரம்பம்: 23 - 2 - 86
Bond Institutes
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/=

A/L 88
Chemistry: Mr. மகாதேவா
Physics: Mr. நந்தகுமார்
Zoology: Mr. K. சிவபாதம்
Botany: Mr. ஐங்கரநேசன்
Pure Maths: App Maths: Mr. ஆறுமுகம்
ஆரம்பம்: 23—2—86
Bond Institutes
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸ்ரீ மாசி மீ 11 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா. ஆகிர் பிறை 13 (23-02-1986) UTHAYAN — A LIVELY TAMIL DAILY கதிர்:83

தங்கவேலாயுதபுரக் கொடூரம்

# பிரேதங்களை தூக்கி நிற்கச் செய்த பின் சுட்டுக் கொன்றனர்

## வைக்கோல் மீது சடலங்களை குவித்து டீசல் ஊற்றி எரிப்பு

## மண்டை ஓடுகள் கண்டுபிடிப்பு

— மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர் உதயசாரதி —

மட்டக்களப்பு, பெப். 23

அக்கரைப்பற்றுப் பகுதியில் உள்ள தங்கவேலாயுதபுரம் கிராமத்தில், தமிழ் விவசாயிகள் கடந்த 19 ஆம் திகதி கொடூரமாகக் கொலை செய்யப்பட்டு, எரிக்கப்பட்டது குறித்து மேல் விவரங்கள் தெரியவந்துள்ளன.

வயல்களில் சூடு மிதித்துக்கொண்டு நின்ற விவசாயிகளில் நான்கு பேரை, சிருடையில் வந்தவர்கள் முதலில் அடித்துக் கொன்றனர்.

மிகுதியானவர்களை வரிசையாக நிற்கச் சொல்லி, அடித்துக் கொன்றவர்களின் நான்கு பிரேதங்களையும் தூக்கி நிற்கச் செய்தபின்னர் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர்.

அதன் பின்னர், சூடு மிதித்த இடத்தில் வைக்கோல் மீது சடலங்களைக் குவித்தனர். டீசல் எண்ணெயை ஊற்றிக் கொளுத்திவிட்டுச் சென்றனர்.

சம்பவத்தில் தப்பியவர்கள் மூலம் சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்ற மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளின் பிரஜைகள் குழுக்களுக்குத் தகவல் கிடைத்தது.

சம்பவம் நடைபெற்ற வயல்வெளியில் பிரஜைகள் குழுவினர் மண்டை ஓடுகளையே காண முடிந்ததாம்.

பிரஜைகள் குழுவினரிடம் தப்பி வந்தவர்கள் மூலம் கிடைத்த தகவல்களை ஊர் வாசிகள் தெரிவித்தனர். அவர்கள் கூறியதாவது:-

புதன்கிழமை (19-02-86) காலை 7 மணி அளவில் சிருடையினர் அந்த இடத்துக்கு வந்தனர். வயலில் அறுவடை

(4ஆம் பக்கம் பார்க்க)

### சம்பவத்தில் இறந்தோர் விவரம்

மட்டக்களப்பு, பெப் 23

தங்கவேலாயுதபுரம் படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் 43 ஆண்களின் பெயர்கள் வருமாறு:-

என். தியாகராஜா, வயது 28. ஆர். செல்லையா, வயது 32. ஆர். சாமித்தம்பி, வயது 30. ஆர். சிவபாலன், வயது 18. வே. குழந்தன், 27 வயது. து. இராமலிங்கம், வயது 26. எம். முத்துலிங்கம், வயது 18 ரங்கன்போல், வயது 28.

மேற்கூறப்பட்ட அனைவரும் அலிகம்பையைச் சேர்ந்தவர்கள்.

கொல்லப்பட்ட தங்கவேலாயுதபுரம் வாசிகள் வருமாறு;

எஸ். சிவபாலன், 28 வயது. கே. நாகராசா, 37 வயது. கவானி

(4ஆம் பக்கம் பார்க்க)

## பகிரங்க விசாரணை நடத்த ஜனாதிபதிக்கு தந்தி

மட்டக்களப்பு, பெப். 23

தங்கவேலாயுதபுரம் படுகொலைச் சம்பவம் குறித்து பகிரங்க விசாரணை ஒன்றை நடத்தும்படி மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, அம்பாறை பிரஜைகள் குழுக்கள், ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அவசர தந்தி ஒன்றை அனுப்பியிருக்கின்றன.

இதனிடையில் இப் படுகொலைச் சம்பவம் பற்றி மயிர்க்கூச்செறியும் தகவல்கள் அந்த இடத்துக்கு வெள்ளிக்கிழமை விஜயம் செய்த பிரஜைகள் குழு உறுப்பினர்களிடம் தெரிவிக்கப்பட்டன.

பிரஜைகள் குழுவின் உபதலைவர் வண. பிதா. சந்திரா பெர்னாண்டோ, செயலாளர் திரு. சாம் தம்பிமுத்து ஆகியோர் 7 மையில் தூரம் டிராக்டரில் சென்று சம்பவம் நடந்த இடத்தை அடைந்தனர்.

250 கிராமவாசிகளும் கூட இவர்களுடன் சென்றனர்.

சூடு மிதிப்பு நடந்த இடத்தில் மண்டை ஓடுகள் காணப்பட்டன.

அவற்றைக் கணக்கெடுத்துப்பார்த்ததில் 60பேர் வரையில் இறந்து இருக்கலாம் என்று பொதுவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

ஆனால் இறந்ததாகக் கருதப்படும் 44 பேரின் பெயர்கள் மட்டும் தான் கிடைத்துள்ளன.

இதனிடையில் சூடு மிதிப்புக்குப் பயன் படுத்தப்பட்ட 3 டிராக்டர்களையும் 150 மூடை நெல்லுடன் ஆயுத படையினர் கொண்டு போய் விட்டனர் என்று பிரஜைகள் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

### வேறெங்கும் நடவாத சம்பவம்

அம்பாறை மாவட்டத்தில் தங்கவேலாயுதபுரத்தில் நூற்றுக்கு அதிகமான தமிழ் விவசாயிகள் கொல்லப்பட்டு பின்னர் எரிக்கப்பட்டமை உலகில் வேறு எங்கும் இடம்பெறாத கொடுமை.

இப்படி மட்டக்களப்பு பிரஜைகள் குழுவின் உபதலைவர் வண. பிதா. சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

### ராஜதந்திரிகள் அதிர்ச்சி!

மட்டக்களப்பு,பெப். 23

தங்கவேலாயுதபுரம் படுகொலைச்சம்பவம் குறித்து வெளிநாட்டு ராஜதந்திரிகள் பலத்த கவலையும் அதிர்ச்சியும் தெரிவித்தனர் என்று பி. பி. சி. அறிவித்தது.

இச்சம்பவம் குறித்து ஒரு சுதந்திர விசாரணை மேற்கொள்ளப்படுவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின என்று இந்திய வானொலி அறிவித்தது.

முச்சந்தி முரளி



கிழக்கு மாகாணத்திலை சிங்களவரைக் குடியேத்திறதுக்கு சரிப்படுத்திச் சொல்லவும் ஒண்டு வேணுமல்லே. அதுக்குத் தான் எங்கடை பெடியளை அங்கை திறந்த சிறையிலை வைக்கப் போகினம்!

### உளவாளிக்கு மின்கம்ப தண்டனை

யாழ்ப்பாணம், பெப் 23

திஜஹாமி ரஞ்சித் என்பவர் நேற்று யாழ் நகரில் மின்கம்ப மரண தண்டனைக்கு உள்ளானார்.

ரூபன் என்ற புனை பெயரில் இவர் உளவு பார்க்க வந்தார் என்ற சந்தேகத்தில் பிடிக்கப்பட்டு தகுந்த

(4- ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு அக்கரைப்பற்றில் 50 பேர் கைது

கொழும்பு, பெப். 23

ஆயுதப் படையினரின் தேடுதல் வேட்டையின் போது மட்டக்களப்பில் 6பேரும் அக்கரைப்பற்றில் 44 பேரும் கைது செய்யப்பட்டனர்.

## யாழ் பொலிஸ்நிலையம் முன்பாக ஒருவர் சூடுபட்டு மரணம்

நல்லூர், பெப் 23

யாழ் பொலீஸ் நிலையம் முன்பாக சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞர் ஒருவர் சூடு பட்டு மரணமானார்.

நேற்று முன்தினம் இரவு 1. 30 மணி அளவில் இச் சம்பவம் நடந்தது.

இறந்தவர் மன்னாரைச் சேர்ந்த லியோ மொறுயஸ் செபஸ்தியாம்பிள்ளை (வயது 25) என அடையாளம் காட்டப்பட்டது.

யாழ். பல்கலைக் கழகத்தில் வர்த்தகத்துறை கலைமாணி பட்டப் படிப்பிற்காக இறுதி வருடத்

(4ஆம் பக்கம் பார்க்க)

பூஸாவில் உள்ள

# தமிழ் இளைஞர் ஆயிரம் பேர் வீடு திரும்பமாட்டார்கள்

## அவர்களைத் தென்னிலங்கையில் குடியமர்த்த அரசு ஏற்பாடு

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, பெப். 23

பூஸா தடுப்பு முகாமில் உள்ள சுமார் ஆயிரம் தமிழ் இளைஞர்கள் தமது வீடுகளுக்கு அனுப்பப்பட மாட்டார்கள்.

அவர்களை தென்னிலங்கையில் குடியேற்றுவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக நம்பப்படுகிறது.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தீவிரவாத இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதானவர்களே அவர்கள், எனினும் அவர்களுக்குஎதிராக வழக்குத் தொடரக்கூடிய அளவுக்குக் காரணம் எதுவும் விசாரணை மூலம் தெரியவரவில்லை. அவர்களை இராணுவத் தடுப்பு முகாமில் இருந்து விடுவிக்க முடிவு செய்யப்பட்ட போதிலும் சொந்த இடங்களுக்கு அனுப்புவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாக மிகவும் நம்பிக்கையாக அறியவருகிறது.

ஆயிரம் தமிழ் இளைஞர்களில் சுமார் 300 பேர் மாணவர்.

ஆயிரம் தமிழ் இளைஞர்களையும் அவர்களின் சொந்தப் பகுதிகளுக்குத் திருப்பி அனுப்புவதிலும் பார்க்க, தென் இலங்கையில் குடியமர்த்தும் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

மாணவருக்கு பாடசாலைகளில் சிங்களமூலம் கல்வி பெறவும் வசதி செய்து கொடுக்கப்படுமாம்.

குடியிருக்க வீடு வசதி

(4ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளி நள்ளிரவு தட்டாதெருச் சந்தியில் நடந்த அசம்பாவிதம்

யாழ்ப்பாணம், பெப். 23

வெள்ளிக்கிழமை நள்ளிரவு யாழ்ப்பாணம், தட்டா தெருச் சந்தியில் நடந்த அசம்பாவிதம் ஒன்றின்போது இரு கோஷ்டிகளைச் சேர்ந்த ஒருசில இளைஞர்கள் மரணம் அடைந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

தமிழீழ விடுதலை புலிகள் இயக்கம், ஈழப்புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய இரண்டுமே இந்த அசம்பாவிதத்தில் சம்பந்தப்பட்டதாக அறியப்படுகிறது.

நீண்ட நேரம் கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தம், குண்டு வெடிப்புச் சத்தம் ஆகியவற்றால் சம்பவம் நடந்த இடத்தை அண்டிய பகுதிகளில் வாழும் மக்கள் பெரும் பீதியுடனும் பதற்றத்துடனும் இரவைக் கழித்தனர்.

தட்டாதெருச் சந்தியில் வாகனம் ஒன்று அநாதரவாக விட்டு செல்லப்பட்டு இருந்ததை நேற்றுக் காலை காணக் கூடியதாக இருந்தது. அயலில் உள்ள பல வீடுகளின் சுவர்களில் துப்பாக்கி சன்னங்கள் துளைத்து இருக்கக் காணப்பட்டன.

இந்த அசம்பாவிதத்தைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட இரு சாராருக்குமிடையில் இரு தடவைகள் சமரச பேச்சுவார்த்தை நேற்று நடைபெற்றன. இனிமேல் இவ்வித தகராறுகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டியதன் அவசியம் அப்போது வலியுறுத்தப்பட்டதாக அறியப்படுகிறது.

(4ஆம் பக்கமும் பார்க்க)

### சுட்டுக் கொலை

சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்று மாலை 6 30மணி அளவில் மன்னார் செயலகத்திற்கு முன்பாக இந்தச் சம்பவம் நடந்தது.

### துப்பாக்கி சூட்டு காயத்துடன் இருவர்

நல்லூர், பெப். 23

சிருடையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கான இருவர் நேற்று யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்கள் விவரம் வருமாறு:-

எஸ். ஈசன் வயது 24. மல்லாவியைச் சேர்ந்த இவர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பொழுது முறிகண்டிப் பகுதியில் நடைபவனியாக வந்துகொண்டிருந்த சிருடையினர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகச் சொல்லப்பட்டது.

இதனால் இவருக்கு முழங்காலில் காயமேற்பட்டு சத்திரசிகிச்சையின் பின் இவருடைய முழங்காலுக்குக் கீழ் கால் கழற்றப்பட்டது.

என். மனோகரன் (28 வயது)நெடுங்கேணியைச் சேர்ந்த இவருக்கு நாரியில் சூடுபட்டது.

# காங்கேசனில் நேற்று திடீர் ஷெல் தாக்குதல்

## களஞ்சியம், கடைகள், வீடுகள் சேதம்

காங்கேசன்துறை, பெப். 23

காங்கேசன்துறைப் பகுதியில் நேற்று சனிக்கிழமை நடந்த ஷெல் தாக்குதலில் காங்கேசன்துறை உரக் களஞ்சியம் சேதமடைந்தது. பலர் காயமடைந்தனர்.

நேற்று நண்பகல் காங்கேசன்துறை ''ஹாபர் வியூ'' ஹோட்டல் பக்கமாக இருந்து முற்றிலும் எதிர்பாராத விதமாக இந்த ஷெல் தாக்குதல் இடம் பெற்றது.

உரக் களஞ்சியத்திற்கு அருகில் இருந்த கடைகளும் சில வீடுகளும் சிறு சேதமடைந்தன. களஞ்சிய ஊழியர்கள் சிலரும், கடை ஊழியர்கள் சிலரும் காயமடைந்தனர்

இச் சம்பவம் இப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

பின்னர் நண்பகல் 1 30 மணியளவில் ஹோட்டல் முகாமிலிருந்து இராணுவத்தினர் தமது பொருள்களை லொறிகளில் ஏற்றிக்கொண்டு மயிலிட்டி பலாலி வீதியால் முகாம் சென்றடைந்தனர்.

எவ்வித அசம்பாவித சம்பவமும் இடம்பெறவில்லை. நேற்று பகல் முழுவதும் காங்கேசன்துறை, மாவிட்டபுரம் பகுதிகளில் பதற்றம் ஏற்பட்டிருந்தது.

### சுபநேரம்

23- 02 - 1986

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:
9-31 முதல் 11-01 வரை

ராகுகாலம்;
5-01 முதல் 6-31 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

### 'சஞ்சீவி' சொற்சிலம்பம்

நேற்றைய (22-2-86) 'சஞ்சீவி'யில் வெளிவந்த சொற்சிலம்பம் போட்டி இல. 5 இல் மேலிருந்து கீழ் பட்டியலில் 16 ஆம் இலக்கத்துக்குரிய விளக்கக் குறிப்பு கவைகளில் ஒன்று எனத்தவறுதலாகப் பிரசுரமாகி விட்டது.

அதனை சுவைகளில் ஒன்று எனத் திருத்தி வாசிக்குமாறு வாசகர்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

—ஆசிரியர்

## நேற்று தாவடியில் மீண்டும் யுத்த விமானம்

### மக்கள் பிளாட்போட்ட வீடுகளின் கீழ் பதுங்கினர்

யாழ்ப்பாணம், பெப். 23

நேற்று மீண்டும் தாவடிப் பக்கமாக யுத்த விமானம் ஒன்று பறந்து வந்தது.

காலை 9.45 மணி அளவில் தென் கிழக்குத் திசைப் பக்கமாக இருந்து தாவடியை நோக்கி வந்து தாழப்பறந்து ஆறு தடவைகள் வட்டமிட்டு விட்டு 10.05 மணி அளவில் அது மறைந்தது.

மீண்டும் 10 25 மணி அளவில் தோன்றிய அந்த விமானம், கோண்டாவில் பகுதியை ஊடறுத்து வடகிழக்குத் திசையான உரும்பராய் பக்கமாகச் சென்று மறைந்தது.

விமானத்தைக் கண்டதும் மக்கள் கலக்கம் அடைந்தனர். பிளாட்போட்ட வீடுகளுக்குள் சென்று பதுங்கினர்.

### தமிழ் நாட்டில் இன்று தேர்தல்

சென்னை, பெப். 23

கடந்த 15 வருடகாலத்தில் முதல் தடவையாக தமிழ் நாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறுகின்றன.

இத் தேர்தல்களில் 18 வயது வந்தவர்கள் முதல் தடவையாக வாக்களிக்கின்றனர்.

தேர்தல் முடிவுகள் திங்கட்கிழமை மாலை வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கப்பூரில் செந்தில் 'கோட்டை' விட்டார்

சிங்கப்பூருக்கு ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் சென்றிருந்தார் செந்தில். அங்கு அவர் ஐநூறு வெள்ளியை(சிங்கப்பூர் காசு) 'கோட்டை' விட்டு விட்டார்!

சிங்கப்பூர் அனுபவம் பற்றி இப்படிச் சொன்னார்:

"சென்னையில் தான் நடிகர், நடிகையரைப் பார்த்தால் விலையைக் கூட்டுகிறார்கள் என்றால் சிங்கப்பூரிலும் அதே நிலைதான்.

ஆறு வெள்ளி பெறுமதியுள்ள பொருள்களைப் பதினைந்து வெள்ளி என்று சொல்லித் தலையில் கட்டி தீட்டி விடுகிறார்கள் இந்த வியாபாரிகள் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரித் தான்.

"சார்! நீங்களாய்ப் போய் வாங்கப் போனா உங்களை ஏமாத்திடுவாங்க, உங்களுக்கு என்ன வேணும்னாலும் எங்கிட்ட சொல்லுங்க, நான் வாங்கிட்டு வந்து தர்றேன்னு" சொல்லி ஒருத்தர் வந்தார். அவர் சென்னைக்காரர்.

அடடா! நம்ம ஊர்க்காரங்க கரிசனை யாருக்கு வரும்னு லிஸ்டோட ஐநூறு வெள்ளியையும் கொடுத்து அனுப்பினேன். போனவர்தான் போனவர்தான்

இன்று வரைக்கும் அவரைச் சந்திக்கவே இல்லை. நல்ல அயிட்டமா தேடிக் கொண்டு வருவார் என்ற நம்பிக்கையோடு இருக்கிறேன்

கையில் உள்ள பணம் எல்லாம் காலியாகி விட்டது ஏதேனும் பொருள்கள் வாங்கிக் கொண்டு போகவேண்டுமே என்று யோசித்துக்கொண்டிருந்தேன்.

எதிர்பாராத விதமாக மெட்ராஸ்காரர் ஒருவர் 'என்ன வேணும்னாலும் வாங்கிட்டுப் போங்க. நான் மெட்ராஸ் வரும்போது காசு வாங்கிக்கிறேன்' என்று சொல்லி லிஸ்டின்படி பொருள்களைக் கொடுத்தார். எனக்கோ பெரிய சந்தோஷம்!

இதைவிட இன்னும் ஒரு மறக்க முடியாத சம்பவம் சிங்கப்பூரில் நிகழ்ந்தது

ஒரு ரசிகை "நான் உங்களுக்கு முத்தம் கொடுக்கலாங்களா" என்று கேட்டார். 'ஒரு முத்தம் தானே கொடுத்திட்டுப் போங்க' என்றேன் நான்.

அந்தப் பொண்ணு அரை மணி நேரத்துக்கு முத்தத்தை மழையாகவே கொட்டிட்டா. நான் வேர்த்து விறுவிறுத்துப் போயிட்டேன்" என்றார்.

தினசரி சினிமா

## பிரிட்டனில் நிறவேற்றுமை

லண்டன், பெப். 22

பிரிட்டனில் உள்ள இளைஞர்கள் மத்தியில் நிறவேற்றுமை அதிகரித்து வருகிறது.

'நியூ சொஸைட்டி' என்ற சஞ்சிகை நடத்திய ஆய்வில், 42 சதவீதமான வெள்ளை நிற இளைஞர்கள் நிறவேற்றுமைக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

# மாற்று அரசு அமைப்பேன்

## அக்கியூனே எச்சரிக்கை

### தனது நடவடிக்கைகளை நியாயப்படுத்த தூது அனுப்புகிறார் மார்க்கோஸ்

மணிலா. பெப்.22

பிலிப்பீன்ஸில் மார்க்கோஸின் அரசாங்கத்துக்கு எதிராக மாற்று அரசாங்கம் அமைக்கப்போவதாக திருமதி அக்கியூனே எச்சரித்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதி றேகனின் தூதுவர் ஹபீப்பை அவர் நேற்று முன்தினம் சந்தித்தார்.

பிலிப்பீன்ஸிற்கான சகல உதவிகளையும் நிறுத்தப் போவதாக அமெரிக்கா அறிவித்திருப்பது தெரிந்ததே.

அமெரிக்காவைப் பின்பற்றி வேறு பல நாடுகளும் செயற்பட உள்ள சமயமே அதிபர் மார்க்கோஸ் தமது நிலையை விளக்கி வெளிநாடுகளுக்கு தூதுக்குழு ஒன்றை அனுப்புகிறார்.

இதற்கிடையில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட மார்க்கோஸைப் பாராட்டி செய்தி அனுப்புவதுஇல்லை என்று சுவிஸ் அரசு தீர்மானித்துள்ளது.

பிரச்சினைக்குரிய ஜனாதிபதி தேர்தலுடன் அடையாளம் காணப்படுவதை சுவிஸ் அரசு விரும்பவில்லை என்று அரசுப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

ரஷ்யா மாத்திரமே மார்க்கோஸைப் பாராட்டிச் செய்தி அனுப்பி உள்ளது.

பிலிப்பீன்ஸின் புதிய ஜனாதிபதியாக எதிர் வரும் புதன்கிழமை மார்க்கோஸ் பதவிப் பிரமாணம் செய்து கொள்கிறார்

பதவிப் பிரமாணவைபவத்தில் கலந்துகொள்ள சகல நாடுகளுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது.

பெரும்பாலான நாடுகள் மிகவும் குறைந்த தரத்தில் உள்ள பிரதிநிதிகளையே வைபவத்துக்கு அனுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது

## தென் லெபனனில் இஸ்ரவேல் சிப்பாய்கள் கடத்தல்

பெய்ரூட், பெப். 22

தென்லெபனனில் 20 இஸ்ரவேலியதுருப்புகள், கடத்திச் செல்லப்பட்டனர்

இதையடுத்து அப்பகுதிகளில் இஸ்ரவேல் துருப்புக்கள் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தப்பகுதியைஇஸ்ரவேல்அமைதிப்பிராந்தியமாக ஏற்கெனவே பிரகடனப் படுத்தியிருந்தது

இந்த ஆட்கடத்தலை மேற் கொண்டதற்குத் தானே பொறுப்பு என இஸ்லாமிய இயக்கமொன்று உரிமை கோரியுள்ளது

தெற்கு லெபனனில் இருந்து இஸ்ரவேல் துருப்புகள் வாபஸ் ஆக வேண்டுமென்று அந்த இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

### பேச்சு ஆரம்பம்

கெய்ரோ, பெப். 22

மத்திய கிழக்கு தீர்வு சம்பந்தமாக பலஸ்தீனிய ஜோர்தானிய பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாக உள்ளன.

இப்படி எகிப்திய ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் அறிவித்தார்.

## மார்க்கோஸுக்கு எதிரான பத்திரிகையாளர் கொலை

கலிபோர்ணியா, பெப 22

பேர்டினண்ட் மார்க்கோஸுக்கு எதிரான பத்திரிகையாளர் ஒருவர் கலிபோர்ணியாவில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இக்கொலையின் பின்னணியில் பிலிப்பீன்ஸ் அரசாங்கம் இருந்திருக்கலாம் என்று அமெரிக்க காங்கிரஸின் ஆசிய உபகமிட்டித் தலைவர் ஸ்ரீபன் சொலாஷ் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட பத்திரிகையாளரின் பெயர் ஒஸ்கார் சல்வாலெரு— வயது 41. 'பிலிப்பீன்ஸ் நியூஸ்" பத்திரிகையைச் சேர்ந்தவர்.

மார்க்கோஸ் தமது கொலைப் படையை பிலிப்பீன்ஸில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்துள்ளார் போன்று தோன்றுவதாக ஸ்ரீபன் சொலாஷ் மேலும் சொன்னார்.

"பிலிப்பீன்ஸ் நியூஸ்" என்ற இந்தப் பத்திரிகை அமெரிக்காவில்70 ஆயிரம் பிரதிகள் விற்பனையாகிறது. அமெரிக்காவில் கூடுதலாக விற்பனையாகும் பிலிப்பீன்ஸ் — அமெரிக்கப் பத்திரிகை இது தான்.

## வெளி உலகில்

## ரஷ்ய 'மிர்' விண்வெளி நிலையம்

மாஸ்கோ, பெப் 22

புதிய விண்வெளி நிலையம் ஒன்றை ரஷ்யா அனுப்பியுள்ளது.

விண்வெளி வீரர்கள் எவரும் அதில் அனுப்பப் படவில்லை.

இவ்விண்வெளி நிலையத்துக்கு 'மிர்' என்று பெயர் இடப்பட்டுள்ளது.

ரஷ்ய மொழியில் 'மிர்' என்றால் 'சமாதானம்' என்று பெயர்.

## குன்றக்குடி அடிகளார் பஞ்சாயத் தலைவர்

சிவகங்கை, பெப். 22

குன்றக்குடி பஞ்சாயத்தின் தலைவராக தவத்திரு குன்றக்குடி அடிகளார் போட்டியின்றித் தெரிவானார்.

பஞ்சாயத்து மக்கள் கேட்டுக்கொண்டதன் பேரிலும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்படும் என்றுகூறியதின்பேரிலும் நான் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தேன் — இப்படி குன்றக்குடி அடிகளார் சொன்னார்.

ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது ஒருவருக்கு வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதே பஞ்சாயத்துத் தலைவர் என்ற முறையில் எனது பிரதான இலட்சியமாக இருக்கும்— இப்படி அடிகளார் மேலும் சொன்னார்.

## குஜராத்தில் 970 பெண்கள் தற்கொலை!

புதுடில்லி, பெப் 22

குஜராத் மாநிலத்தில் கடந்த ஆண்டில் 970 பெண்கள் தற்கொலை செய்து கொண்டனர்.

வறுமை காரணமாகவே பெரும்பாலான பெண்கள் தற்கொலை செய்துகொண்டனர் என்று மாநில முதலமைச்சர ஆதாரம் காட்டி பி.ரி.ஐ செய்தி வெளியிட்டது

### தடையை மீறி கடாபியைசந்தித்தனர்

அமெரிக்கத் தடையையும் மீறி, 28 அமெரிக்க அரசியல் மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் லிபியத் தலைவர் கடாபியைச் சந்தித்தனர்.

லிபியாவுக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டால் அதை எதிர்த்து வழக்காடப் போவதாக அமெரிக்கப் பிரஜைகள் அறிவித்துள்ளனர்.

---

தாவடிச் சம்பவம்

## சிறுவர்களின் மரண விசாரணை

நல்லூர், பெப். 23

தாவடியில்இடம்பெற்ற குண்டுவீச்சில் பலியான இரண்டு சிறுவர்களின் மரண விசாரணைகள் நேற்று நடைபெற்றன.

நீதிவான் திரு. எஸ். நாகராசா யாழ். ஆஸ்பத்திரியில் வைத்து விசாரணை நடத்தினார்.

இறந்த இருவரும் நேற்று அடையாளம் காட்டப்பட்டனர்.

சுந்தரலிங்கம் மயூரன் (வயது 7) இவர் தாவடி மகாவித்தியாலயத்தில் இரண்டாம் ஆண்டில் கல்வி பயின்று வந்தவர்.

விமானத்தில் இருந்து வீசப்பட்ட குண்டினால் இவரது தலைவேறு உடம்பு வேறாக வீசப்பட்டுக் கிடந்தது தெரிந்ததே.

மற்றவர் சிறீரங்கன் ராஜசேகரன் (வயது 10) இவரது தாய், தகப்பன் நுவரெலியாவில்வாழ்ந்து வருகிறார்கள்.

## நவா மினி

(உஷா மினி முன்பாக)

248/5 K. K. S Rd,

யாழ்ப்பாணம்.



## சிங்கராயர் வழக்கு தீர்ப்பு மார்ச் 3 இல்

கொழும்பு, பெப் 23

வண. பிதா சிங்கராயர் வழக்கின் தீர்ப்பு மார்ச் 3 ஆம் திகதி வழங்கப்பட உள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எச். டபிள்யூ. சேனநாயக்கா விசாரணை முடிவில் இதை அறிவித்தார்.

நீர்வேலி வங்கிக் கொள்ளை பற்றித் தெரிந்திருந்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அது பற்றி அறிவிக்கத் தவறியதாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வண. பிதா ஆபரணம் சிங்கராயர், வண. பிதா பி. ஏ. சின்னராசா ஆகியோர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

வண. பிதா சின்னராசா மீதான விசாரணை அவரின்றியே நடைபெற்றது.

முதற்கட்ட விசாரணையின் போது வண. பிதா சிங்கராயர் அளித்த ஒப்புதல் சாட்சியம் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று என வாதிடப்பட்டது. அதுஏற்றுக்கொள்ளக்கூடியது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து நடந்த இரண்டாம் கட்ட விசாரணை முடிவடைந்தது.

## தகுதியிருந்தால் உடன் வேலை உண்டு

★ இயந்திர இயக்குனர்:
ஹைடில்வேக் ஒட்டமற்றிக் சிலிண்டர் இயந்திரம் 5 வருட அனுபவம்

★ மேற்பார்வையாளர்:-
பாதுகாப்புச் சேவையிலிருந்து இளைப்பாறியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்,

உங்கள் அனுபவங்களுடன் எதிர்பார்க்கும் வேதனத்தையும் குறிப்பிட்டு 27-02-86 க்கு முன் விண்ணப்பிக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

விளம்பர இலக்கம் 7,
மே/பா உதயன்
த. பெ. இல: 23,
யாழ்ப்பாணம்.

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# கண்ணி வெடியில் சிக்கிய லொறி சின்ன பின்னமாகியது

### தப்பிய பிக்கு சாட்சியம்

திருமலை மாவட்ட செய்தியாளர்

திருகோணமலை, பெப், 23

கண்ணிவெடித் தாக்குதலில் லொறி சின்ன பின்னமாகியது. அந்த இடம் புகை மண்டலமாகக் காட்சி அளித்தது.

அந்த லொறியின் பின்னால் சென்ற வாகனத்தில் இருந்த சேருவில மகா விகாரை பீடாதிபதி வண இ. பி. கருணகீர்த்தி தேரர் மரண விசாரணையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு சொன்னார்.

தெஹிவத்தை கண்ணி வெடித் தாக்குதலில் மரணமான 34 சிங்களவர், 5 சிப்பாய்கள் சம்பந்தமான மரணவிசாரணை மூதூர் நீதிவான் திரு. எஸ். கதிரவேற்பிள்ளை முன்னிலையில் நடந்தது.

அப்போதே வண. கருணகீர்த்தி தேரர் மேற்கண்டவாறு சொன்னார்.

சம்பவம் நடந்த இடத்தில் முன்னரும் கண்ணி வெடித்தாக்குதல் இடம்பெற்றது.

அதனால் சம்பவ தினம் முன்னால் சென்ற வாகனங்களில் இருந்த சிப்பாய்கள் அந்த இடத்தில் இறங்கி நடந்து சென்றனர்.

அதன் பின்னர் கைகள் மூலம், லொறியைக் கொண்டு வரும்படி சைகை காட்டினார்கள் சிப்பாய்கள். அதைத் தொடர்ந்து லொறி உள்ளே இருந்தவர்களுடன் சென்றது. திடீரென்று வெடிச் சத்தம் கேட்டது. லொறி சின்ன பின்னமாகியது. புகைமண்டலம் கிளம்பியது.

இதை பின்னால் சென்ற வாகனம் ஒன்றிலிருந்தபடி நான் கவனித்தேன்.

இப்படி தேரர் சொன்னார்.

39 மரணங்களும் கொலைச் சம்பவங்கள் என்று நீதிவான் தீர்ப்பளித்தார்.

### அவசரகால சட்டம் நீடிப்பு

கொழும்பு, பெப். 23

அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது.

இதற்கான பிரேரணை வியாழனன்று நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

அவசரகால நீடிப்புப் பிரேரணையை நாடாளுமன்ற விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் வின்சன்ட் பெரேரா சமர்ப்பித்தார்.

### ஆஸ்பத்திரியில் கைதானவர் கொழும்புக்கு

மட்டக்களப்பு, பெப். 23

நெருப்புக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த செங்கலடி இளைஞர் சேகர், பாதுகாப்பு படையினரால் விமானம் மூலம் கொழும்புக்கு கொண்டு போகப் பட்டார்

முகமூடி நபர் தலையாட்டியதைத் தொடர்ந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் வைத்து சேகர் தங்கி இருந்த வார்டுக்கு பலத்த காவல் முன்னர் போடப்பட்டது.

தீவிரவாத சந்தேக நபர் இவர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

## மரண தண்டனை அட்டையுடன் வீதியில் கிடந்த சடலம்

கிளிநொச்சி, பெப். 23

"விடுதலைப் போராளிகளைப் பின்தொடர்ந்து இராணுவத்துக்கு தகவல் கொடுத்த குற்றத்திற்காக மரண தண்டனை வழங்கப்படுகிறது"

இப்படி விடுதலைப் புலிகளால் எழுதப்பட்ட விளம்பர அட்டையுடன் சுமார் 45 வயது மதிக்கத்தக்க ஒருவர் கிளிநொச்சி கண்டி வீதி, கந்தசுவாமி கோயில் முன்பாக இறந்து கிடந்தார்

இவர் பின்னர் கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் என்னுமிடத்தைச் சேர்ந்த திரு. குணசிங்கம் என அடையாளம் காணப்பட்டது. சடலம் உறவினரால் எடுத்துச் செல்லப்பட்டது.

இச் சடலம் வீதியில் கிடந்த சமயம் பொதுமக்கள் கூடிநின்று பார்த்துக் கொண்டிருந்த வேளை திடீரென உழவு இயந்திரம் ஒன்றில் கறுப்புச் சட்டை இராணுவத்தினர் வந்தனர்.

அங்கு நின்றவர்களைச் சுற்றிவளைத்து விசாரித்தனர்.

இந்த இராணுவம் அதிகாலைவேளை கிளிநொச்சி 4-ஆம் வாய்க்கால், பரந்தன் 3-ஆம் வாய்க்கால் பகுதிகளில் இரவு வேளையில் சோதனை நடத்திவிட்டு வந்த வேளையிலேயே இச்சடலம் வீதியில் இருப்பதனைக் கண்டு அவ்விடம் வந்து விசாரணை நடத்தியது.

### தீவிரவாதிகளை ஒப்படைத்தல்

## பிரிட்டன் - இந்தியா போன்று இந்தியா - இலங்கை ஒப்பந்தம் தேவை என்கிறார் அனில்

கொழும்பு, பெப். 23

சீக்கியத் தீவிரவாதிகளை ஒப்படைப்பது குறித்து பிரிட்டனுடன் இந்தியா ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

அது போன்று தமிழ் தீவிரவாதிகளை ஒப்படைப்பது குறித்து ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய முன்வரும்படி இந்தியாவை இலங்கை கேட்க வேண்டும்.

இப்படி மத்துகம எம். பி. திரு அனில் முனசிங்க நாடாளுமன்றத்தில் பேசுகையில் சொன்னார்.

அவசரகாலச் சட்டம் நீடிப்புப் பிரேரணை மீதான விவாதம் நடந்தது.

திரு. அனில் முனசிங்க மேலும் பேசுகையில்,

அவசரகாலச்சட்ட விதிகளைப் பாவித்து தென் இலங்கை வாலிபர்களை அரசு கைது செய்து வருகிறது. இதை அனுமதிக்க முடியாது – என்று சொன்னார்.

மகரகம எம். பி. திரு. தினேஷ் குணவர்த்தன பேசுகையில்,

படையினரின் செயல்கள் குறித்து விசாரணை நடத்த கமிஷன் ஒன்றை அரசு நியமிக்க வேண்டும் — என்று சொன்னார்.

### தேவை

வொக்ஸ் வெகன் கார் 12000, 13000 தேவை தொடர்பு கொள்ளவும்
ராஜநாயகம்
C/o சுலைமான் கண்டு பிறதேர்ஸ்
5, 7 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

### மணமகள் தேவை

யாழிந்து உயர்குல வியாபாரத்தில் சிறந்த வருமானமுள்ள 35 வயது பிரமச்சாரிக்கு அழகான கையெழுத்தும் குறைவற்ற தோற்றமும் 28 வயதுக்குட்பட்ட மணமகள் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். முழு விபரமும் முழு உருவ புகைப்படம் ஜாதகமில்லாத கடிதங்களும் சீதனமும் சாதி மதமும் கல்வியறிவும் கண்டிப்பாகக் கவனிக்கப்படமாட்டாது. பிறப்பெண் அல்லது கூட்டெண் எழுவிரும்பத்தக்கது. விளம்பர இலக்கம்: 8, உதயன் மே.பா, 15, 2ஆவது ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

### பயிற்சி

கடவுச்சீட்டுள்ள இருபாலாருக்கும் தெரிவு செய்யும் தொழிலுக்கேற்ற அரபுமொழி பேச்சுப் பயிற்சியுடன் சகலதும் இலவசம். மொத்தமாக எழுபத்தைந்து வெற்றிடங்கள் சகல தொழில்களுக்கும் உண்டு. கல்வி, அனுபவ விபரத்துடன் சுய விலாசமிட்ட முத்திரையுறையுடனும் ஐந்து தினங்களுக்குள் தாமதத்தை தவிர்க்க யாழ்ப்பாண தபால் பகுதியில் விண்ணப்பத்தை அனுப்பவும். விளம்பர இலக்கம்: 9. உதயன் மே.பா., 15, 2ஆவது ஒழுங்கை,யாழ்ப்பாணம்.

### ஆங்கிலம்

9ம், 10ஆம் (G.C.E.) வகுப்புகளுக்கு விசேஷ ஆங்கிலம் 1987 N.C.E. பரீட்சைக்கு வகுப்புகள் (1-3-86ல்) ஆரம்பம் ஆங்கிலப் பேச்சும் இலக்கணமும் (4 மாதம்) ஆரம்ப ஆங்கிலம் (Basic English) ஆசிரியர்கள்: T. செல்லப்பா B.A. (Lond) Dip.Ed., S K. சாமி B.A (Hons) Dip. Ed., 45/4, B.M.C. ஒழுங்கை, (மாஸ்டர் இன்ஸ்ரிரியூற்றிற்கு முன்பாக) மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

தர்மத்தை மறக்காதே. உண்மையைப் பேசு. மற்றவர்களின் தவறுகளைக் கண்டுபிடிப்பதில் காலத்தைக் கழியாதே. கடவுளின் சகல படைப்புக்களிலும் அன்பு செலுத்து.

- காந்தி முனிவர்

உதயன்

உண்மை - [illegible] - நடுநிலைமை

இல: 15, [illegible] ஒழுங்கை
வின்சர் நிலைய வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805
22078
23-02-86
த. பெ. 22

## வன்செயலும் சமரசமும்

திம்புப் பேச்சுக்களைத் தொடர்ந்து புதுடில்லியில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தை அடிப்படையாக வைத்து இனப்பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் விருப்பம் கொண்டுள்ளது.

ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தன இவ்வாறு அறிவித்திருக்கிறார். நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதில் ஆர்வம் இருப்பதாக ஜனாதிபதி கூறிக்கொள்கிறார். ஆனால் மாகாண சபைகளுக்கு அப்பாற்பட்டுப் போக அவர் விரும்பவில்லை. இத்தனை கஷ்டநஷ்டங்களுக்குப் பிறகும் தமிழ் மக்கள் மாகாண சபைகளை ஏற்பார்கள் என்று அவர் நினைத்தால் அது வெறும் பகற் கனவு.

பெரும்பான்மைத் தலைவர்களோ அல்லது அரசியல்வாதிகளோ கூறும் சொற்சிலம்பங்களை நம்பும் நிலையில் தமிழ் மக்கள் இல்லை. வாழ்வா, சாவா என்ற இறுதிக் கட்டத்தில் அவர்கள் இருக்கிறார்கள்.

கிழக்கு மாகாணத்தை, திட்டமிட்ட குடியேற்றத்தின் மூலம் பெரும்பான்மை மக்களின் பிரதேசமாக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளை தமிழ் மக்கள் அறியாமல் இல்லை.

நாட்டின் எந்தப் பிரஜையும் பால், இன, மத வேறுபாடின்றித் தமாக நிலம் வாங்கி, வீடு கட்டிப் பாதுகாப்புடன் வாழ விரும்பி நாட்டின் எந்தப் பகுதியிலும் குடியேறுவது அடிப்படை மனித உரிமை. அதனை விட்டு, அரசாங்கச் செலவில் சிறுபான்மை இனம் ஒன்றின் பாரம்பரிய பிரதேசத்தில் அவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் கபட நோக்குடன், வேண்டுமென்றே நடத்தப்படும் குடியேற்றம் வேறு.

இந்த இரண்டுக்கும் வேறுபாடு தெரியாதவர்கள் போல அரசாங்கத்தவர்கள் பாசாங்கு செய்தாலுங்கூட, தமிழ் மக்களுக்குத் திட்டமிட்ட குடியேற்றத்தின் தாக்கம் தெரிந்துவிட்டது.

திருகோணமலை மாவட்டத்தில், ஆண்டு பலவாக பரம்பரை பலவாக வாழ்ந்துவந்த தமிழ் மக்கள் அங்கிருந்து வன்செயல்கள் மூலம் விரட்டி அடிக்கப்பட்ட அனுபவம் எப்படி மறந்து போகும்?

அரசும், பெரும்பான்மை இன அரசியல் தலைவர்களும் இவ்விஷயத்தில் இனிமேல் எந்த உறுதிமொழியையோ அல்லது வியாக்கியானத்தையோ கொடுத்தாலும் தமிழ் மக்கள் ஜீரணிக்கப் போவதில்லை.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், மாகாணங்களை இணைக்கும் எந்தத்திட்டத்தையும் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்க முடியாது என்று ஜனாதிபதி கூறியிருப்பது விசனத்துக்கு உரியது.

பிரச்சினை ஒன்றுக்கு நியாயமான தீர்வு காணப்பட வேண்டுமானால், அதில் சம்பந்தப்பட்ட இருசாராரும் விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும்.

ஆனால் இலங்கை இனப்பிரச்சினை விஷயத்தில் அரசாங்கம் தான் இருக்கும் இடத்தில் இருந்து சிறிதளவேனும் நகர்ந்து முன்னேற விரும்புவதாக இல்லை. ஏதோ ஒரு விதத்தில் விட்டுக்கொடுத்து நியாயமான தீர்வுக்கு வரவேண்டும் என அது நினைப்பதாக இல்லை. இதனை இந்திய அரசாங்கமும் உணர்ந்திருப்பதாக அறிகிறோம்.

மாவட்ட சபையை, மாகாண சபையை விட்டால் மார்க்கம் இல்லை என்று அரசாங்கம் நினைக்குமானால், தமிழர் பிரச்சினையை அது தீர்க்கப்போவதில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இனப்பிரச்சினை விவகாரத்தில்—

தமது உரிமைகள் மறுக்கப்படுவதாகக் குற்றம் சாட்டுபவர்கள் தமிழ் மக்கள்.

தமது மொழி, மண், கலை, கலாசாரம் பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்க முடியவில்லை என்று குரல் கொடுப்பவர்கள் தமிழர்கள்.

எனவே நியாய சிந்தையுள்ள அரசாங்கமானால், பிரச்சினைக்குத் தீர்வாக தமிழ் மக்கள் எதை விரும்புகிறார்கள் என்பதை அவர்களிடம் அறிய வேண்டும். அவர்கள் தமது உரிமையை சுயமாக நிர்ணயிக்கச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

இல்லையேல் நியாயமான தீர்வைக் (அரசுக்கு நியாயமாகப்பட்ட தீர்வுமட்டுமல்ல, தமிழ்மக்களுக்கும் நியாயமானதாகத் தெரியும் தீர்வைக்) காணவேண்டும்.

அதற்கும் விருப்பம் இல்லையெனில் பாரபட்சமில்லாத சர்வதேச விசாரணைச் சபை ஒன்றிடம் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் காணும் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும்.

அதனை விடுத்து, இராணுவ நடவடிக்கையால் தமிழ்மக்களை இம்சைப்படுத்தி தான் விரும்பும் தீர்வைத் திணிக்க அரசு முயலக்கூடாது. அதேபோல, பயங்கரவாதத்தை ஒழிப்பதாகக் கூறி தமிழ் இனத்தை அழிக்கக் கூடாது.

வன்செயலோடு சமரசம் செய்யமுடியாது என ஜனாதிபதி கூறுகிறார். இராணுவத்தினரின் வன்செயலோடு தமிழ்மக்களும் சமரசத்துக்கு வரத்தயங்குவர் என்பதை அவர் உணர்ந்திருப்பார். எனவே அரச இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி சமரசத்துக்கு வழிகாட்டும் முன்மாதிரியை அவர் கைக்கொண்டால், பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் புதிய திருப்பம் ஏற்படும்.

### தபசு காலத்தின் 2 ஆவது வாரம்

# ஆண்டவரே நம் ஏகசிந்தை

## அலகை எதிர்த்து நிற்கும் வல்லமை பெறுவோம்

**எம். எஸ். ராஜா**

நம்பிக்கையின் பரம்பொருளோ இறைவா உமது வார்த்தையின் ஒளியில் எங்கள் செயல்கள், சிந்தனைகள், வாழ்க்கை ஆகியவற்றையும் ஆராய்ந்து பார்க்க வேண்டிய வரத்தைத் தாரும்.

இவ்வாரத்தின் கருப்பொருள்: நம்பிக்கை

வாசகங்கள்:- ஆதியாகமம் 15: 5: 12, 17-18 பிலிப்பியர் 3: 17 - 41 நற்செய்தி லூக்காஸ், 9: 28-36

ஆண்டவருக்கும் ஆபிரகாமுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை பற்றி முதலாம் வாசகம் கூறுகின்றது.

இறைவன் தம் வாக்குறுதியை என்றும் காப்பதனால் உடன்படிக்கை என்றதும் எம் உள்ளத்தில் நம்பிக்கையுணர்வைப் பிறப்பிக்கின்றது.

அனைத்துலகையும் நமக்குக் கீழ்ப்படுத்த வல்ல இயேசுவில் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும் என புனித சின்னப்



பர் வலியுறுத்துகின்றார்.

இயேசு தாம் அனுபவிக்க இருக்கும் பாடுகள், மரணம் ஆகியவற்றைக் காணும்பொழுதும் தமக்குப் பிரமாணிக்கமாய்த் தம்மோடு இருக்க வேண்டும் என எதிர்பார்த்து அவரது நெருங்கிய சீடருக்குத் தமது மாட்சியின் விழிப்பைக் காண்பிப்பதை நற்செய்தி விவரிக்கின்றது.

**மறையுரைக் குறிப்பு**

இவ்வுலகைக் கட்டியெழுப்பும் பொறுப்பை இறைவன் எம்மிடம் ஒப்படைத்துள்ளார். ஆயினும் எமது இறுதி நம்பிக்கை இவ்வுலகத்திற்கு உட்பட்டதாயில்லை. நாம் இருப்பது இவ்வுலகைக் கட்டியெழுப்பவே தவிர அழிக்கவல்ல.

ஆகவே எமது வாழ்வின் முதன்மையானவற்றைத் தேர்வு செய்து கொள்ளவேண்டும் அவசியமற்றவற்றிற்காக அழிவுப் பாதையைத் தேடி உயர்ந்த இலட்சியங்களை இழந்துவிடக் கூடாது. பணத்திற்காக சுய இலாபத்திற்காக மனித பண்புகளைப் பறிகொடுக்கலாமா?

மனிதனுடைய அடிப்படைத் தேவைகளை மறந்தோ அல்லது மறைத்தோ, செல்வத்தையும் செல்வாக்கையும் எப்படிச் சேகரிக்க முடியும்?

அற்ப சொற்ப இலாபத்திற்காக எத்தனை முறைகள் நாம் மனித உறவுகளையே விலைபேசியுள்ளோம் எம்மைப்பல கூறுகளாகச் சிதைவுற ஈர்க்கும் சக்திகள் மத்தியிலும் எமது நம்பிக்கை தளராது இருக்கட்டும்.

இன்று பணம், அதிகாரம் வன்செயல் போன்ற சக்திகள் முழுச் சமுதாயத்தையும் ஆட்டிப் படைக்கின்றன.

நாம் அவற்றிற்கு அடிமைப்படாது, நம்பிக்கையின் மக்களாக எமது தீர்மானங்களையும், செயல்களையும் அன்பு, அமைதி, நீதி, சமத்துவம் ஆகிய பண்புகளில் தோய்ந்ததாய் அமைப்போம்.

ஞானக்கதிர்

**தனிப்பட்ட சிந்தனைக்கு**

—எமது வாழ்வில் அதி விலை மதிப்புள்ளதாகக் கருதுவது என்ன என்று அறிய எமது வாழ்வை உற்று நோக்குவோம்.

—தேவையற்ற அற்ப விடயங்களுக்காக மனித உறவுகளைக் கைநெகிழ்ந்த கட்டங்கள் உண்டா?

**குழுச் சிந்தனைக்கு**

— எமது சூழலில் நிலவும் தீயநெறி முறைகளைக் குழுவாக, இனம் கண்டு கொள்ளல்.

— இத்தீய வழிமுறைகளை மாற்றக்கூடிய பொதுச் செயற்பாடுகளைக் கூறுக.

— இவற்றை நடைமுறைப்படுத்தச் சில திட்டங்கள் தீட்டுக.



**பொய்யாமொழி**

குறள்:

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

பொருள்:

தன்னை நோக்கி வரும் விருந்தினரை நாள்தோறும் போற்றுகின்றவனுடைய வாழ்க்கை துன்பத்தால் வருந்திக் கெட்டுப்போவது இல்லை'

## 'ருகிங்' சம்பந்தமாக உபவேந்தர் வெளியிட்ட அறிக்கை விவரம்

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் 'ருகிங்' தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

யாழ் பல்கலைக்கழகத்தில் புதிதாக புகும் மாணவரைத் துன்புறுத்துதல் பற்றிப் பலவாறு பல வெளியீடுகளும் அறிக்கைகளும் பத்திரிகைகள் மூலமாகவும் துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் மூலமாகவும் வெளிவருகின்றன.

புதிய மாணவர்களைத் துன்புறுத்தினால் தண்டனை விதிக்கப்படும் என புதிய மாணவர் வருவதற்கு முன்னரே எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

புதிய மாணவரைத் துன்புறுத்தினால் நிர்வாக அதிகாரிகளுக்கோ துணைவேந்தருக்கோ துன்புறுத்தப்பட்டவர்கள் முறையிடு செய்தால் விசாரணையின் பின் துன்புறுத்தியவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என உறுதி கூறப்படுகின்றது.

இதுவரை நிர்வாகத்திற்கு அறிவிக்கப்பட்ட முறையீடுகளில் ஒன்று மாணவி ஒருவரை மாணவர் ஒருவர் துன்புறுத்தினார் என விரிவுரையாளர் ஒருவர் அறிவித்து சம்பந்தப்பட்ட இருவரையும் நிர்வாகத்திடம் ஒப்படைத்ததாகும்.

இதை விசாரித்தபோது மாணவி மாணவனுக்கு எதிராக எந்தவிதமான பாரதூரமான குற்றத்தையும் சுமத்தாதபடியாலும் –

மாணவன் தான் இனிமேல் துன்புறுத்தலில் ஈடுபடமாட்டேன் என்று வாக்குறுதி அளித்து மன்னிப்புக் கேட்டதனாலும் அவரைக் கடுமையாக எச்சரித்ததைவிட மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

பாரதூரமான துன்புறுத்தல் செய்யப்படவில்லை என்பது எழுத்தில் தரப்பட்டுள்ளது. இது தவிர இதுவரை மாணவிகள் துன்புறுத்தப்படுவது பற்றியோ வதை செய்யப்படுவது பற்றியோ நிர்வாகத்திடம் முறையீடு செய்யப்படவில்லை.

இதுதவிர சில சிரேஷ்ட மாணவர்கள் சில மாணவர்களை (மாணவிகளை அல்ல) துன்புறுத்தியதாக முறையிடப்பட்டது.

துன்புறுத்தல் பற்றி விசாரணை செய்வதற்கென நியமிக்கப்பட்ட குழு விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும் நிலையில் இருக்கின்றது

அறிக்கைப்படி சிரேஷ்ட மாணவர்கள் குற்றவாளிகள் எனத் காணப்பட்டால் உரிய தண்டனை விதிக்கப்படும்.

துன்புறுத்தப்படுவோர் தனிப்பட்ட முறையில் சிரேஷ்ட மாணவ ஆலோசகரிடமோ, பீடாதிபதிகளிடமோ, துணைவேந்தரிடமோ முறையீடு செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும். இதனை மாணவப் பிரதிநிதிகளும் எதிர்க்கமாட்டார்கள்.

தனிப்பட்ட முறையில் மேலே கூறப்பட்ட வகையில் சொல்லப்படுவன பகிரங்கப்படுத்தப்படமாட்டாது.

சிரேஷ்ட மாணவர்களும் புதிய மாணவர்களும் ஆசிரியரும் ஒத்துழைத்தாலேயே இத்தகைய துன்புறுத்தலைத் தடை செய்ய முடியும்.

இன்றைய நிலையில் இத்தகைய சமூக விரோத செயல்கள் அகற்றப்பட வேண்டியது அவசியம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

[அறிக்கையின் சுருக்கம் நேற்றைய சஞ்சீவியில் வெளிவந்திருந்தது ]

## யாழ் பல்கலைக்கழக மாணவர் அவை அறிக்கை

யாழ்ப்பாணம், பெப். 23

ருகிங் சம்பவம் தொடர்பாக யாழ் பல்கலைக்கழக மாணவர் அவை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு:

அண்மைக்காலமாக யாழ் பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர்கள் மீது ருகிங் அத்துமீறல் தொடர்பாக பல அவதூறான செய்திகள் சில சக்திகளினால் பல்கலைக்கழகத்திற்கு உள்ளும் வெளியிலும் துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், ஒலிபெருக்கி மூலம் மேற்கொள்ளப்பட்டன. இந்த அனைத்து பிரசாரங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் மாணவர் அவைக்கோ அல்லது நிர்வாகத்திற்கோ இது வரையில் எந்தவித முறைப்பாடுகளையும் தெரிவிக்கவில்லை.

இந் நடவடிக்கைகள் மாணவர்கள் மத்தியில் பெரும் குழப்பத்தினை ஏற்படுத்தியதுடன் சமுதாயம் பல்கலைக்கழகம் மீது கொண்டுள்ள நல்ல அபிப்பிராயத்தையும் களங்கப்படுத்தியுள்ளது.

இந் நடவடிக்கைகளையிட்டு மாணவர் அவை கண்டனம் தெரிவிப்பதுடன் இப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் மாணவர் அவையினால் மாணவர் பொதுக்கூட்டம் ஒன்று கைலாசபதி கலையரங்கினில் கூட்டப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

(i) ருகிங் அத்துமீறல் [illegible] அவை மாணவர்களைப் பாதித்து இருந்தால் அவை தொடர்பான தகவல்களை நிர்வாகத்திடமோ அல்லது மாணவர் அவையிடமோ எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

(ii) விசாரணைக்காகக் கொடுக்கப்பட்ட சம்பவங்கள் நிர்வாகத்தினால் உடனுக்குடன் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

(iii) நிர்வாகம் எடுக்கும் இது தொடர்பான நடவடிக்கைகளுக்கு மாணவர்கள் பூரண ஆதரவை வழங்க வேண்டும்.

இது வரை நடத்தப்பட்ட விசாரணைகளின் படி வெளியில் பிரசாரப் படுத்தப்பட்ட சம்பவங்கள் எதுவும் எந்த ஓர் மாணவர் மேலும் மேற்கொள்ளப்படவில்லை.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் எச்சசொச்சமாக அமைந்த இலங்கைப் பல்கலைக்கழகங்களில் ருகிங் சம்பவங்கள் பல்கலைக்கழகங்கள் தொடங்கப்பட்ட காலத்தினில் இருந்து இடம் பெற்று வந்துள்ளன.

இந்த வகையில் எமது யாழ்பல்கலைக்கழகத்திலும் இத்தகைய சம்பவங்கள் இடம் பெற்று வந்துள்ளன.

மாணவர் அவை இத்தகைய சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் கடந்த காலங்களில் ஈடுபட்டு வந்துள்ளது.

எதிர்காலங்களில் [illegible] இடம் பெறாத வகையில் [illegible] நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கடமை மாணவர் அவைக்கு உண்டு என்பதனை நாம் உறுதியாக தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இணைப்பைத் தவிர ஏனைய பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கலாம்

### லலித் சொல்கிறார்

கொழும்பு, பெப்.23

இணைப்பைத் தவிர ஏனைய சகல பிரச்சினைகளையும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

இப்படிச் சொன்னார் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி.

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில், திரு. அத்துலத் முதலி மேலும் சொன்னதாவது:-

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண தடையாக இருப்பது வடக்கு கிழக்கு இணைப்பு ஒன்றுதான்.

இந்தியப் பிரதமரைச் சந்தித்து நமது தூதுவர் பெர்னுட் திலகரத்தின இலங்கையின் நிலை குறித்துச் சொல்லியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தை குறித்து மேலதிக விவரங்களை நமது தூதரிடம் இருந்து எதிர் பார்த்துள்ளேன்.

பேச்சுவார்த்தைகள் நல்ல பலனை அளிக்கும் என்று நான் நம்புகின்றேன்.

இப்படி அமைச்சர் சொன்னார்.

## பருத்தித்துறை மக்கள் வங்கி தினமும் ஒருமணி நேரம் இயங்குகிறது

நாகர்கோயில்,பெப்.23

பருத்தித்துறைப் பகுதியில் உள்ள, அனேகமான வர்த்தக ஸ்தாபனங்கள் மூடப்பட்டுள்ள போதும் மக்கள் வங்கிக் கிளை திறந்திருக்கக் காணப்பட்டது.

பருத்தித்துறை மக்கள் நடவடிக்கைக் குழுவின் வேண்டுகோளுக்கிணங்க பருத்தித்துறைப் பகுதி வாடிக்கையாளரின் நன்மை கருதி மக்கள் வங்கி பருத்தித்துறைக் கிளை தினமும் காலை 9-00 மணி தொடக்கம் 10-00 மணிவரை காசோலைகளை வைப்பிலிடுவதற்காகத் திறக்கப்பட்டிருக்கும் என மக்கள் வங்கி உதவிப் பிராந்திய முகாமையாளர் திரு. வெ. சிதம்பர நடராசா உறுதியளித்தார்.

அதனைத் தொடர்ந்து மக்கள் வங்கிக் கிளையின் தளபாடங்களையும் சில பொருள்களையும் ஏற்றுவதற்கு மக்கள் நடவடிக்கைக் குழு இணங்கியது.

வியாழக்கிழமை காலை 9-00மணி தொடக்கம் 10-00மணிவரை ஏற்கனவே உறுதியளித்தபடி மக்கள்வங்கி பருத்தித்துறைக் கிளையில் காசோலைகள் வைப்பிலிடும் வேலை நடைபெற்றது.

இப்பணியில் இரண்டு வங்கி அதிகாரிகள் ஈடுபட்டார்கள்.

ஏனையோர் நெல்லியடியில் கடமையாற்றுகின்றார்கள் என தெரிவிக்கப்பட்டது

இப்பகுதியில் கடந்த 15 நாட்களாக வங்கி இயங்காமையால் வங்கி வாடிக்கையாளர்கள் பெரிதும் கஷ்டம் அடைந்தனர்.

பருத்தித்துறை, புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் சிரமத்துக்கு உள்ளாகின.

அத்துடன் மக்கள் வங்கி மூலமாக ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவுகள் யாவும் நெல்லியடியில் அமைந்துள்ள கிளையின் மூலம் வழங்கப்படும் என்று வங்கி வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் கிளைகளும் பருத்தித்துறை நகரசபைக் காரியாலயம், நீதிவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் ஆகியன தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளன.

## ஜெயக்குமார் விடுதலை

மட்டக்களப்பு,பெப்.22

தவக்குமாரைத் தேடிப் போன ஆயுதப்படையினரிடம் அகப்பட்ட ஜெயக்குமார் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டார்.

கல்லடி முகாமில் இவ்வளவு காலமும் இவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

தவக்குமாரைக் கொண்டு வந்தால் தான் ஜெயக்குமார் விடுவிக்கப்படுவார் என்று பாதுகாப்புப் படையினர் முன்னர் பெற்றோர்களிடம் கூறியிருந்தனர்.

தவக்குமாரும். ஜெயக்குமாரும் சகோதரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## கலை அமுதம் வெளியீடு

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் வருடாந்த வெளியீடான 'கலை அமுதம்' சஞ்சிகை அண்மையில் வெளிவந்துள்ளது.

சஞ்சிகையின் வெளியீட்டுவிழா கலாசாலை அதிபர் ஜனாப். எஸ். எச். எம். ஜெமீல் தலைமையில் நடைபெற்றது.

இதேவேளை, புதிதாக பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் அண்மையில் கலாசாலைக்கு வருகை தந்தனர்.

சமய சந்நிதிகளில்

**மஹோற்சவம்**

'நகுலேஸ்வரம்' என அழைக்கப்படும் சரித்திரப் பெருமை வாய்ந்த கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் (23-2-86) இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது

எதிர்வரும் மார்ச் மாதம் (8-3-86) சனிக்கிழமை இரதோற்சவமும் (9-3-86) ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் நிகழ இருக்கின்றன.

(8-3-86) இல் வரும் மஹாசிவராத்திரி தினவிழா இங்கு சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

## கொம்பனித் தெரு தடுப்பு முகாமிலிருந்து அமர்தீப் சிங் தப்பினர்

கொழும்பு, பெப் 23

கொம்பனித் தெரு தடுப்பு முகாமில் காவலில் வைக்கப்பட்டிருந்த அமர்தீப்சிங் என்ற இந்தியப் பிரஜை கடந்த வாரம் தப்பி ஓடிவிட்டார்.

இத்தகவல் கோட்டை நீதிவான் ஜனாப். எஸ். ஐ. இமாம் முன்னிலையில் வெளியிடப்பட்டது.

தப்பி ஓடிய அமர்தீப் சிங் மீது பகிரங்க விளுந்து பிறப்பிக்கப்பட்டது

ஓட்டல் ஒபரோயில் இடம் பெற்றதாகக் கூறப்படும் காசோலை மோசடி சம்பந்தமாக இரண்டு தாய்லாந்து பிரஜைகளுடன் இவரும் கைது செய்யப்பட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**தபால் மூலம் ஆங்கிலக் கல்வி**

மாணவர்கள், வேலை செய்வோர், வெளிநாடு செல்வோர் இல்லத்தரசிகள் அனைவருக்கும் ஏற்றது.

கட்டணம்: Rs. 250

இலவச விபரக்கொத்திற்கும் விண்ணப்பப் பத்திரத்திற்கும் தயவுசெய்து எழுதவும்.

Cantabia Institute
(Shoot of Oxonia, Colombo)
21, MAIN STREET, JAFFNA. T'Phone: 24201

# உதயன்

23. 02. 1986

**G.C.F. (O.Level) Fnglish & NCE**

புதிய பிரிவு ஆரம்பம்: 15 - 2 - 86

முழுக் கட்டணம்: ரூ. 250/-

Lecturer: Mr. KANDIAH NAVARENDRAN

வகுப்புகள் பாதுகாப்பான இடத்தில் நடைபெறும்.

Cantabia Institute
(Shoot of Oxonia. Colombo.)
21, MAIN STREET, JAFFNA. T'Phone: 24201

# நிதி உதவி பெறவே நாடகமாடுகின்றனர்

## அரசின் பேச்சுவார்த்தை முயற்சி குறித்து ஈரோஸ்

சென்னை, பெப். 22

பேச்சுக்களுக்கு மீண்டும் எம்மை இலங்கை அரசு அழைப்பது, உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்து மீண்டும் நிதி உதவிகளைப் பெறுவதற்கே.

இப்படி ஈரோஸ் இயக்கம் அறிவித்துள்ளது.

சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் ஈரோஸ் மேலும் கூறியிருப்பதாவது;

எதிர்வரும் ஜுன் மாதம் உதவி வழங்கும் நாடுகளின் அமைப்பு மீண்டும் கூடுகிறது.

அந்த நாடுகளை வளைத்து மீண்டும் உதவிகளைப் பெறுவதற்கு முன்னோடியாகவே பேச்சுக்கள் நடத்தத் தயார் என்று இலங்கை கூறத் தொடங்கியுள்ளது.

இலங்கை கடந்த ஆண்டும் இதே இரட்டை வேடம் போட்டு உலக நாடுகளின் நிதி உதவியைப் பெற்று இராணுவ பலத்தை அதிகரித்தது.

இப்படி அந்த அறிக்கை கூறுகிறது.

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இவ்வாலயத்துக்கான புதிய சித்திரத்தேர் எதிர்வரும் 8.3.86 இல் வெள்ளோட்டம் விடப்படும்.

## ஆண்டு நிறைவு விழா

மானிப்பாய், பெப். 23

சந்தரோடை மேற்கு சமாதான சபையினரின் ஓராண்டு நிறைவு விழாவும் புதிய ஆண்டுக்கான உத்தியோகத்தர்கள் தெரிவும் இன்று 23ஆம் திகதி நடைபெறும்.

இக்கூட்டத்துக்கு சபையின் தலைவர் திரு. க. கந்தையா தலைமை வகிப்பார்.

## வெள்ளி அசம்பாவிதம் குறித்து ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், பெப். 23

வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ். நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது.

''துப்பாக்கி மொழி மட்டுமே புரியக்கூடியவர்களோடு துப்பாக்கிகளுடாகவே பேச முடியும்'' என்ற தலைப்பில் வெளியான இந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

விடுதலைப் போராட்டத்தை நசுக்க ஸ்ரீலங்கா அரசு முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இராணுவ வெறியாட்டத்தாலும், விமானத் தாக்குதல்களாலும் எமது மக்கள் கொன்றழிக்கப் படுகிறார்கள்.

இந்நெருக்கடியான சூழ்நிலையில் போராளிகள் இடையேயான ஐக்கியத்தின் அவசியம் மேன்மேலும் வலுவடைகிறது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் விடுதலை இயக்கங்களிடையேயான ஐக்கியத்திற்காக விடாப்பிடியாக உழைத்தோம்.

ஈழப் போராட்டச் சூழ்நிலைகளிலும், சர்வதேச தேவைகளின் அடிப்படையிலும், பல்வேறு முரண்பாடுகள் இருந்தபோதும் ஈழ தேசிய விடுதலை முன்னணியைக் காப்பதில் எமது முழுமையான பங்களிப்பைச் செலுத்தினேம்.

இயக்க முரண்பாடுகளால் போராளிகள் கொல்லப்படும் கோர நிகழ்வுகளுக்கெதிராக அரசியல் ரீதியான வழிமுறையைக் கையாண்டு விடாப்பிடியாகப் போராடி வந்தோம்.

23-11-85 இல் சர்வதேசப் போர்முனைப் பாசறையில் பயிற்சி பெற்ற எமது தோழன் கப்டன் றேகன் தமிழீழ விடுதலைப் புலிகளால் திட்டமிடப்பட்ட முறையில் படுகொலை செய்யப்பட்டான்.

இக்கோர நிகழ்வு அரங்கேறிய போதும் நாம் நிதானமிழக்கவில்லை. எமது துப்பாக்கிகளை சக போராளிகளுக்கெதிராக திருப்பவில்லை.

மக்கள் மத்தியில் இப்படுகொலையின் பின்னணியை விளக்கிப் பிரசாரம் செய்தோம். ''போராளிகளின் சமாதியின் மேல் ஐக்கியம் சாத்தியப்படுமா?'' எனக் கேள்வி எழுப்பினேம்.

தோழர் றேகனின் இரத்தம் உறையுமுன்னல், அத்துயரத்திலிருந்து நாம் மீளமுன்னல் மீண்டும், 20-2-86 அன்று அதிகாலையில் கூலிப்படைகள் மீது தாக்குதல் நடத்த கோட்டை முகாமை நோக்கி முன்னேறிய எமது வீரமிக்க தோழனும், சர்வதேசப் போர் முனைப்பாசறையில் பயிற்சி பெற்றவனுமான தோழன் அமீன் தமிழீழ விடுதலைப் புலிகளால் திட்டமிடப்பட்ட முறையில் படுகொலை செய்யப்பட்டான்.

இதன் பின்னரும் கூட நாம் பேச்சுவார்த்தையிலேயே ஈடுபட்டோம். இப் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் எம்மால் கைது செய்யப்பட்ட தமிழீழவிடுதலைப் புலிகளின் உறுப்பினர் மூவரை அவர்களிடத்தில் ஒப்படைத்தோம்.

சக தோழனின் இழப்பால், இத்தகைய சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றமையால் கொதிப்புற்றெழுந்த எமது தோழர்களின் செயற்பாடுகளை நிறுத்துவதாகவும் கூறியிருந்தோம்.

இவ்வளவுக்கும் பின்னல் 21-2-86 அன்று இரவு சுமார் 9மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகள் எமது மக்கள் விடுதலைப் படையின் முகாம் மீது தாக்குதல் நடத்த முற்பட்டனர்,

தற்காப்பு நோக்கங்களுக்காக நாம் திருப்பித் தாக்கியதில் பலர் காயமடைந்திருக்கலாம். இத்தாக்குதலில் ஈடுபட்டு தப்பியோடிய இருவரை தமிழீழ விடுதலை இயக்கத்தினர் கைது செய்து விசாரித்ததில் தாம் 'புலிகள்' என்பதை அவர்கள் ஒத்துக்கொண்டனர்.

இதன் பின்னர் புறப்பட்டுச் சென்ற எமது தோழர்களை யாழ் நகரத்தின் முக்கியமான சந்தியொன்றில் வழிமறித்து புலிகளின் காவலர் குழுவினர் துப்பாக்கிப் பிரயோகம்செய்ய முற்பட்ட போது பதிலுக்கு நாமும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தோம்.

அச்சூழலிலிருந்த புலிகளின் முகாம்களிலிருந்து தொடர்ச்சியாகத் தாக்குதல் நடத்தப்பட்டது. பதில் தாக்குதலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இத்தகைய சம்பவங்களையும் ஆங்காங்கே இடம்பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் எரிச்சலூட்டும் நடவடிக்கைகளையும், தொடர்ந்து இதனைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரத் தவறினல் நாமும் பதில் தாக்குதலில் ஈடுபட வேண்டி நேரிடும் என தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அறிவித்தோம்.

இச்சந்தர்ப்பத்தில் பொதுநபர்கள் சிலரின் தலையீட்டின்பேரில்இன்று 22 2 86 நண்பகல் 12 மணி அளவில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையில் கைது செய்யப்பட்ட தோழர்களும், ஆயுதங்களும், சொல்லப்பட்டவரும் பரஸ்பரம் கைமாற்றப்பட்டனர்.

ஐக்கியத்தின் அவசியத்தை நாம் பூரணமாக உணர்கிறேம். ஐக்கியத்தைக் காரணம் காட்டி எமது வீரமிக்க தோழர்களை இரத்த வெறியர்களுக்குப் பலி கொடுக்க நாம் தயாராக இல்லை.

ஐக்கியத்தை எம்மிடம் வலியுறுத்துபவர்கள் முதலில் அதனைச் சிர்குலைப்பவர்களிடம்--சகபோராளிகளை கொன்றெழிப்பவர்களிடம்—அதனை வலியுறுத்துமாறு தோழமையுடன் வேண்டிக்கொள்கின்றேம்.

போராட்டக் கடமைகள், தேசியத் தேவைகளின் மீதான எமது பொறுப்புணர்வை, பலவீனமாகக் கருதுபவர்களுக்கு நாம் வேறு வழிகளில் பாடம் கற்பிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

தோழர்களின் பலி எடுப்பால் கொதிப்படையும் தோழர்களுக்கும், மக்களுக்கும் பதில் சொல்ல வேண்டிய தேவை எமக்குள்ளது. ஐக்கியத்தை வலியுறுத்துபவர்கள் இந்த நிலைமைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இயக்கங்களிடையேயான மோதல்கள் தவிர்க்கப்படவேண்டியவை. இதனுல் ஏற்படும் இழப்புகள் அநியாயமானவை. ஆனுல்; துப்பாக்கி மொழி மட்டுமே புரியக்கூடியவர்களோடு துப்பாக்கிகளாலேயே பேசமுடியும் என்பதையும் வலியுறுத்துகின்றேம்.

இப்படி ஈ. பி. ஆர். எல். எவ், விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மத்திய கல்லூரி வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம், பெப், 23

யாழ் மத்திய கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையில் நேற்று நடந்த கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி வெற்றி பெற்றது.

யாழ் மத்திய கல்லூரி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 8 விக்கெட் நஷ்டத்திற்கு 50 ஓவர்களில் 214 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் முறையே கலாவண்ணன் ஆட்டமிழக்காமல் 78 ஓட்டங்களையும், எம். மத்தியூ 41 ஓட்டங்களையும், விஜயநாதன் 29 ஓட்டங்களையும், ராஜ்குமார் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் எடுத்து திறமையாக விளையாடினுர்கள்.

மகாஜனு கல்லூரியின் சார்பில் பிரபாகரன் 18 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுகளையும் மதியழகன் 26 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுகளையும் திலகராஜா 36 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

மகாஜனு கல்லூரி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 37·2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றனர்.

யாழ். மத்திய கல்லூரியின் சார்பில் விவேகானந்தன் 17 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுகளையும் சிவசந்திரன் 10 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுகளையும் முரளிதரன் 14 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுகளையும் ராஜசேகர் 4 ஓட்டங்களை கொடுத்து 1 விக்கெட்டையும் விஜயநாதன் 3 ஓட்டங்களை கொடுத்து 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

## வித்தாரம்

எப்படித் தம்பிமுரளி! உன்ரை கோபம் எல்லாத்தையும் கடிதங்களிலை காட்டி விட்டாய். ஒண்டு இரண்டே முத்திரைச் செலவு 75 சதம் எண்டும் பாராமல் எத்தினைகடிதங்களைப் போட்டாய். எதுக்குமே பதில் போடநேரமிருக்கவில்லை. மன்னிக்க வேணும்.

வேலைக்கு வராமல் நிண்டு விட்டு, சுகமில்லை அதாலைதான் வரயில்லை எண்டு சுகமான காரணம் சொல்லுறவை தான் அதிகம் பேர். எனக்கு அதுக்கு மனம் வராது. உண்மையைப் பேசி பழக்கிப்போட்டினம் என்ரை அப்பரும் அம்மாவும். அதாலை பொய் பேச வேணும் எண்டு நினைச்சாலும் என்னை அறியாமல் நாக்கு உண்மையைச் சொல்லிப் போடும். அந்தப் பழக்கத்தாலை நான் பல இடங்களிலை இடக்கு முடக்கா எத்துப்பட்டு, பட்ட கஷ்டம் சொல்லேலாது அப்பா.

உன்னைச் சந்திக்க வேணும் எண்டு ஒதுக்கிற நேரத்திலை ஏதாவது ஒரு வேலை வந்து சேர்ந்திடும். அல்லாட்டா ஆரும் அலட்டல் பேர் வழியள் வந்து சேந்திடுங்கள். ஒண்டை அனுப்பிப்போட்டுஉன்னிட்டை வருவம் எண்டு புறப்படயிக்கை அடுத்த பனிக்கேஸ் ஒண்டு வந்து சேரும். எப்பிடிச் சொன்னுலும், நாங்கள் நேரத்தைக் கண்டுபிடிக்கப்படுகிற கஷ்டம் அதுகளுக்கு எங்கே விளங்கப் போகுது

நீ தேரிலையும் வந்தனியாம். அப்பவும் சந்திக்க முடியயில்லை. என்னைக் குறை விளங்காதை தம்பி. கடிதங்களிலை தான் கோபத்தைக் கொட்டித் தீர்த்திட்டியே.சரி விஷயத்துக்கு வருவோமே.

* * *

கடந்த வாரத்திலை யாழ்ப்பாணத்திலை சம்பவம் சம்பவமா நடந்தது உனக்குத் தெரியும் தானே. ஆனுல் உந்தத் தாவடிச் சம்பவத்தை மறக்கேலாது.

அது தான் அந்தப் போன புதன்கிழமை . . . காலையிலை நோட்டம் விட்டு விட்டு, மாலையிலை வந்து குண்டு வீசித் தள்ளினவை. அவை நடத்தின சாகஸங்கள், அட்டூழியங்களை எல்லாம் பேப்பர்களிலை பாத்திருப்பாய்.

எனக் கெண்டாபெரிய சந்தேகம். ஐஞ்சாறு விமானங்களும் பொழிஞ்சு தள்ளின குண்டுகள் ஏதோ இரசாயனக் குண்டுகளாத்தான் இருக்க வேணும். சாதாரண குண்டெண்டா உந்தப் பயிர்பச்சை எல்லாம் உப்பிடிக் கருகிச் சாகா தப்பா? குண்டு வீச்சிலை செத்த சின்னஞ்சிறுசுகளின்ரை பிரேதங்களை நீ பாத்திருக்க வேணும். பிளாஸ்டிக் உருகின மாதிரி எல்லோ உருகிக் கிடந்திதுகள்.

அண்டைக்குப் போட்ட குண்டுகள் முழுக்க இரசாயனக் குண்டுகளா இல்லாட்டாலும் அதிலை கொஞ்சமாவது நாசகார இரசாயனப் பொருள் ஏதோ கலந்திருக்க வேணும் எண்டதுமட்டும்நிச்சயம்.

ஒரு தரத்திலை இவ்விரண்டு குண்டுகளைப் போட்டிருக்கினம். அதுகள் விழுந்த இடத்திலை ஏழு அடிக்கும் நிலத்துக்குள்ளை போயிருக்கெண்டாப் பாரேன்.


அண்டைக்குத் திருகோணமலையிலை இருந்து தான் அந்த ஆறு யுத்த விமானங்களும் வந்ததாய்க் கேள்வி.

நேற்றைக்கு யாழ்ப்பாணத்துக்கு எண்டு நிரந்தரமா ஒண்டு பலாலியிலை வந்து நிக்குது எண்டும் கிசுகிசுக்கள் நடக்குது

அது சரியாய் இருக்கலாம். ஏனெண்டால், தாவடிச் சம்பவத்தை இணுவில் சம்பவம் எண்டு பேர் போட்டு, மூண்டு பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக புனைகதையும் எழுதி, மேலும் அப்பிடித் தாக்குதல்கள் நடக்கும் எண்டுமெல்லே ''போக்கறுவார்'' அமைச்சு அறிக்கை விட்டது.

அவைக்குத் தரையாலை போய்ப் பெடியளைப் பிடிக்க ஏலாதாம். இனி குண்டு வீசித்தான் 'காம்பு'களை அழிக்கப் போகினமாம். அப்பிடிச் சொல்லி தமிழ்ப் பகுதியையே அழிக்கிறது தானே அவையின்ரை திட்டம்.

மாவட்டத்தையும் மசகாணத்தையும் குடுகுடுக்கையாய் அடிச்சுக் கொண்டு — அதைச் சொல்லியே காலத்தைக் கடத்திக்கொண்டு — தமிழனை பூண்டோடு அழிக்க இஸ்ரவேல் எஹூதி சொல்லிக்குடுத்த புத்தி மதி எண்டாச் சும்மாவே!



## சம்பவத்தில் ---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டேவிட், 29 வயது. எஸ் தவநாதன், 30 வயது. எஸ். அருட்செல்வம், 30 வயது. கே. வடிவேலு, 27 வயது. பி. யோகராசா, 18 வயது. பி. ராஜாராம், 30, வயது. கே. விசுவகேது, 23 வயது. கே. பேரின்பம், 28 வயது.

இ. சதாசிவம், 35 வயது. த. சபாரத்தினம். 22 வயது. கே. மோகனராசா, 22 வயது. இ. ரவீந்திரன், 18 வயது. சி. இன்ஞசி, 32 வயது. ம. தங்கராசா, 13 வயது. என். தியாகராசா, 18 வயது எஸ். சுந்தரம், 20 வயது கே. தர்மன், 22 வயது. கே. பத்மநாதன், 24வயது. கே. கந்தையா, வயது 44 மா. ரவீந்திரன், வயது22 பொ. இராமதுரை, வயது 22.

கொல்லப்பட்ட அக்கரைப்பற்று வாசிகள் வருமாறு :-

பூ. நல்லதம்பி வயது65. ந. விஞயகமூர்த்தி, வயது 34, ந. கோபாலகிருஷ்ணன், வயது 23, ந. கணபதிப்பிள்ளை, வயது 40, க பாஸ்கரன், வயது 23, கே. வைரமுத்து, வயது 45, (இவரின் இரண்டு புதல்வர்களும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டு விட்டார்கள். அவர்களின் பெயர்கள் கிடைக்கவில்லை.)

கே. சோமசுந்தரம், வயது 40, க. இராமலிங்கம், வயது 35, சி. தாமோதரம், வயது, 30, ந. பாக்கியராசா, வயது 27, கு குகநீதிராசா, வயது 26, கி. சதாசிவம் வயது 34, ம. தெய்வேந்திரன், வயது 30.

## உளவாளி - - -

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணையின் பின்பு மரண தண்டனை வழங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ் ரயில் நிலையத்துக்கு அருகில் அருகில் இருந்து இந்த நபர் இளைஞர் கோஷ்டியால் கடத்திச் செல்லப்பட்டார்.

நேற்று மத்தியானம் ரயில் மூலம் இவர் யாழ்ப்பாணம் வந்தார் என்று நம்பப்படுகிறது.

இளைஞர்கள் அந்த நபரைப் பிடிக்க முயன்ற போது அந்த நபர் இளைஞர்களைத் தாக்க முற்பட்டார் என்றும் பலத்த பிரயத்தனத்தின் மத்தியில் அந்த நபரை இளைஞர்கள் வாகனம் ஒன்றில் தூக்கிப் போட்டுச் சென்று விசாரித்தனர் என்றும் சொல்லப்படுகிறது.

## யாழ்: .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தில் பயின்றுகொண்டிருந்தார்.

இவருடைய முதுகுப் பக்கத்தில் குண்டு துளைத்த அடையாளம் காணப்பட்டது.

அதிகளவு இரத்தமும் வெளியேறி இருந்தது

இவர் சிவப்பு நிற ஷேர்ட்டும், சாரமும் அணிந்திருக்கக் காணப்பட்டார்.

இவருடைய சடலத்தை வியோர சந்தான மரியதாஸ் அடையாளம் காட்டினர்.

இன்று மரண விசாரணை நடைபெறும்.

## தமிழ்--

(1 ம் பக்கத் தொடரச்சி)

தொழில் வாய்ப்பு பெற்றுக் கொடுத்து மறுவாழ்வுஅளிப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாக அரசுடன் நெருங்கிய வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்பட்டது

## பிரேதங்களை ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்துகொண்டு இருந்தவர்கள், சூடு மிதித்துக் கொண்டு இருந்தவர்கள் அனைவரையும் முன்னுக்கு வருமாறு கூப்பிட்டனர்.

அதன்படி எல்லாரும் சென்றனர். அவர்களில் இருந்த 3 பெண்களையும் ஒரு வயோதிபரையும் தூரச் செல்லும்படி கூறப்பட்டது.

பின்னர் நான்கு பேர் அடித்துக் கொல்லப்பட்டனர்.

அந்த நான்கு சடலங்களையும் தூக்கிக்கொண்டு நிற்கும்படி ஏனையோரிடம் கூறப்பட்டது.

அதன்படி அனைவரும் அப்படியே வரிசையாக நின்றனர்.

பின்னர் சரமாரியாக அவர்கள் மீது சுடப்பட்டது.

சூடு மிதித்த இடத்தில் இருந்த வைக்கோல் மேல் சகலரின் சடலங்களும் குவிக்கப்பட்டன.

சடலங்களின் மேல் மரக் குற்றிகள் போடப்பட்டன. பின்னர் டீசல் ஊற்றப்பட்டு எரிக்கப் பட்டன.

வயல் வாடிகளும் சேதமாக்கப்பட்டன. பெண்கள் மானபங்கப்படுத்தப் பட்டனர். —இப்படி பிரஜைகள் குழுப் பிரமுகர்களிடம் தெரிவிக்கப் பட்டது.

## இளவாலையில் ஊர்வலம்

பண்டத்தரிப்பு, பெப்.23

இளவாலையில் வெள்ளிக்கிழமை நடந்த ஊர்வலத்தில் சுமார் மூவாயிரம் பேர் கலந்து கொண்டனர்.

இளவாலை சென். ஹென்றி பாடசாலைக்கு அருகிலிருந்து ஊர்வலம் ஆரம்பமானது.

இளவாலை மாரிசன் கூடல் மாணவ மாணவியர், பொதுமக்கள் ஊர்வலத்தில் பெருமளவில் கலந்து கொண்டனர்.

வணக்கத்துக்குரிய ஜஸ்ரின் அவர்களது மோட்டார் சைக்கிள் அபகரிக்கப்பட்டதை ஆட்சேபித்தே இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

ரெலிபோன் பேச, ரெலெக்ஸ் அனுப்ப, ரெலிபோன் வாங்க

# ரெலிகுளோப்

இரவு பகல் 24 மணி நேர சேவை - சனி, ஞாயிறு, விடுமுறை உட்பட்ட சகல நாட்களிலும்.

பாதுகாப்பான இடம் (விமானத் தாக்குதல் தவிர)

ஆர். ஜி. கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ரெலி: 25088 (6 தொடர்புகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். வெளியிட்ட திகதி 23-2-1986.